4. நடைமுறைக் கேள்வி.

எதிர்க்கட்சித் தலைவருக்குத் தனிச்சலுகை

DR. H. V. HANDE : Sir, on a point of order. Several hon. Members including myself have given notice of an adjournment motion on the subject. But the hon. the Leader of the Opposition has got precedence over the hon. Members who have already given notice of the adjournment motion and he rose on a point of clarification and a reply was given. I presume the hon. the Leader of the Opposition has not given notice of an adjournment motion. (Thiru P. G. Karuthiruman rose.) I will finish my speech and then the hon. the Leader of the Opposition can speak. The hon. the Leader of the Opposition who has not given notice of an adjournment motion has been given precendence over the hon. Members who have given notice of an adjournment motion pointing out that the ayacutdars in the Thanjavur and the Tiruchirappalli districts will be completely affected by the Cauveri Projects including the Hemavathi Project envisaged by the Mysore Government. I want to know what is the order followed in this House in regard to this matter. I want a ruling from the Chair...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை இருக்கிறது என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சில சலுகைகள், மற்ற உறுப்பினர்களைவிட ஒரு சின்ன சலுகை இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நானேகூட ஒரு முறை கூறி, தீர்ப்பளித்திருக்கிறேன். உறுப்பினர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் கையிலே இருக்கின்றன. நான் தீர்ப்பளித்துக் கொண்டே வந்திருக்கிறேன் அவைகளின்மீது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ன பேசப் போகிறார் என்று எனக்கு முன்னால் தெரியாது அல்லவா ? அவர்கள் எழுந்து பேசுவது முறையல்ல என்று நீங்கள் கூறினீர்கள். அதனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதாவது பேச எழுந்திருக்கலாமா, எழுந்திருக்கக்கூடாதா இது போல என்றால், அவர்களுக்கு மற்ற உறுப்பினர்களைக் காட்டிலும் ஒரு தனிச் சலுகை இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அதை ஒட்டித்தான் அவர்கள் இப்பொழுது இதைக் கூறியிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஒரு பிஸினஸ் முடிந்து தாங்கள் அடுத்த பிஸினஸுக்குப் போவதாக நினைத்து நான் எழுந்து இதைச் சொன்னேனே தவிர, இல்லாவிட்டால் எழுந்திருந்திருக்க மாட்டேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்பொழுதும் ஒரு விஷயத்தைச் சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குத் தனிச் சலுகையா, தனிச் சலுகையா என்று கேட்கிறார்கள்.

According to May's Parliamentary Practice, the Leader of the Opposition can ask for change in order of business.

என்ற நிலையிலே தான் நான் அபூர்வமாக எழுந்து முக்கியமான பிரச்னையைப் பற்றிப் பேசுகிறேன். எல்லோருடைய நன்மைக்காகவும் தான் பேசுகிறேனே தவிர, என்னுடைய தனிப் பெருமைக்காக அல்ல. தமிழ் நாட்டுப் பெருமைக்காகவும், தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும், தமிழக அரசு இதை எதிர்த்து நிற்க வேண்டும் என்பதற்காகவும், நாமும் அரசாங்கத்தோடு கூட நிற்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்காகவும்தான் நான் எழுந்து சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்பொழுதும் 'இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது' என்று கேட்கிறார்கள். இவர்களைவிட எனக்கு உரிமை இருக்கிறது. அந்தக் கட்சியைவிட எங்கள் கட்சிக்கு உரிமை இருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் 'இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது' என்று கேட்டதை வாபஸ் பெற வேண்டும் . . . .

DR. H. V. HANDE: On a point of personal explanation The hon. Leader of the Opposition has accused me and my party. I now charge the Congress Party in Mysore State for having brought it...

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், 'இந்த அவையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, நான் அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன், அந்த நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து பேசலாமா' என்பது டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய வாதம். எதிர்க் கட்சித் தலைவர் சில நேரங்களிலே அப்படி எழுந்து பேசுவதற்கு உரிமை இருக்கிறது, சலுகை இருக்கிறது என்பதுதான் என்னுடைய தீர்ப்பு. ஆனால் "இவர்களைக் காட்டிலும் எனக்கு உரிமை இருக்கிறது, என்னுடைய கட்சிக்கு உரிமை இருக்கிறது' என்றெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் பேசுவதற்கு உரிமை கிடையாது. மறுபடியும் அதன் மீது டாக்டர் ஹாண்டே அவர்கள், 'இவர்களுக்கு எங்கள் கட்சியைப் பற்றிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது, இவர்கள் கட்சியைப் பற்றியும் என்னால் பேசமுடியும்' என்றெல்லாம் பேசிக்கொண்டே போவது நல்லது அல்ல. இப்பொழுது பிரச்னை என்னவென்றால், எதிர்க் கட்சித் தலைவர் சில நேரங்களில் எழுந்து பேசலாமா, பேசக்கூடாதா என்பது தான். அதைப்பற்றித்தான் நான் தீர்ப்பு அளித்துவிட்டேன் . . . .

(டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

DR. H. V. HANDE: I should be allowed to speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் உட்காருங்கள்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்திருந்தார்கள்.)

DR. H. V. HANDE : You have allowed the hon. Leader of the Opposition to speak. So you must allow me also. He has insulted me.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் அமர வேண்டும் என்ற விதியை முதலில் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நான், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது நியாயம் அல்ல, முறையல்ல என்று குறிப்பிட்டுவிட்டேன். அதற்குப் பிறகும் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்திருந்து பேசுவது முறை அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர் பேசிவிட்டாரே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நியாயம் அல்ல, முறையல்ல என்று சொல்லிவிட்டேனே. உங்களையும் பேசவிட்டு, அது முறையல்ல என்று சொல்ல வேண்டுமா ? அப்படி நீங்களும் பேசி, அவர்களும் பேசிக்கொண்டிருந்தால், அது நன்றாக இருக்குமா ? அப்படிப் பேசிக் கொண்டே போவது முறையல்ல, நல்லது அல்ல.

திரு. கரு. சீமைச்சாமி : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் அப்புறம் ஆகட்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் பிறகு எழுப்பலாம்.

(2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) காவிரி ஆற்றில் ஹேமாவதி இன்னும் மற்ற அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற மைசூர் மாநிலம் எடுத்துள்ள முடிவும், அதனால் தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் ஆயக்கட்டுதார்களும் பாசனமும் பாதிக்கப்படும் நிலையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

" I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, viz., the serious situation arising in Tamil Nadu as a result of the decision of the Mysore Government to go ahead with the Hemavathi and other projects on the Cauvery river, which will result in the sufferings of the Ayacutdars n Tiruchirappalli and Thanjavur districts and the likelihood of a short fall in the agricultural production of our State."

திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,